**வணிக வழக்குக்கான சார்பு  நீதிமன்றம்,**
**ஸ்ரீ னிவாசபுரம், காந்திபுரம்,**
**கோயம்புத்தூர்.**

C.O.S.No.  453 Of   2024

2026 ஆம் ஆண்டு ஜுன் திங்கள்  23- வது நாள் செவ்வாய்க்கிழமை 1969ம் ஆண்டின் 44 வது சட்டத்தின் ஏற்பாட்டின் **திரு.பி.தங்கமணிகணேஷ், எம்.எல்.எம்.,பி.எல்.,** நீதிபதி, வணிக நீதிமன்றம், (சார்பு நீதிபதி), கோயம்புத்தூர் அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.G. தாமோதரன் | கிராமம்: | |
| க.பெ. (அ) த.பெ. | திரு.R. கோபால் | வேலை: | பங்குதாரர், GDS Associates கோவைபுதூர் கோயமுத்தூர் |
| வயது | 57 | செல்போன் எண் | |

பி. வா.சா.1   **திரு.G. தாமோதரன்**   ஆக 23.06.2026 அன்று ஆஜராகி

<u>முதல் விசாரணை</u>

நான் இந்த வழக்கில் பிரதிவாதி. எனது முதன்மை விசாரணை வாக்குமூலத்தை எழுத்துபூர்வமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள சங்கதிகள் உண்மைதான்.சங்கதிகளை நான் அறிவேன். நிரூபண வாக்குமூலத்தில் நான் கையொப்பமிட்டுள்ளேன். அதிலுள்ள  கையெழுத்து என்னுடையது தான்.

1. 14.07.2023 and 13.05.2024– Discharge summary of hospital - Xerox - **Ex.B1** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

2. 19.05.2024 – Hospital Bill - Xerox - **Ex.B2** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

3. 22.11.2023 – Notice of District Legal Service Authority - Served copy - **Ex.B3** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

4. 27.11.2023 – Letter issued to the bank by the defendant - Xerox - **Ex.B4** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

5. 27.11.2023 – Payment in slip Indian Bank Covaipudur- Original - **Ex.B5** – ஆக குறியீடு செய்யப்பட்டது.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் BBA படித்து பாதியில் நிறுத்திவிட்டேன். பிரதிவாதி நிறுவனத்தை 2013 ல் நான் தொடங்கினேன். பிரதிவாதி நிறுவனத்தின் நானும் என் மனைவியும் பங்குதாரர் என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தின் செயல்பாடு என்ன வென்றால் construction and marketing. எங்கள் நிறுவனத்தில் வருமான வரி செலுத்தி வருகிறோம். அதன் பங்குதாரர்களாகிய நாங்கள் இருவரும் வருமான வரி கட்டி வருகிறோம். நிறுவனத்திற்கு என்று தனியாக வருமான வரி செலுத்துவதில்லை. பங்குதாரர்கள் பெயரில்தான் வருமான வரி செலுத்தி வருகிறோம். எங்கள் நிறுவனத்தின் turn over என்ன வென்றால் அது குறிப்பாக சொல்ல முடியாது. வாதி வங்கியில் முத்ரா திட்டம் உத்தேசமாக 2017 ல் தொடங்கினேன். 2015 ல் இருந்து வாதி வங்கியில் எனக்கு கணக்கு உள்ளது. 2013 ல் நான் ஆரம்பித்த தொழிலை தொடர்ந்து நடத்தி வருகிறேனா என்றால் இல்லை, இடையில் 5 வருடங்கள் நிறுத்தி வைத்திருந்தேன், தற்போது marketing மட்டும் செய்து வருகிறேன். 2019 ல் ஏப்ரல் மே மாதங்களில் என்னுடைய தொழிலை நான் நிறுத்தி வைத்திருந்தேன். இந்த

நிறுவனத்திற்கு தனியாக வேறு வங்கியில் கணக்கு இல்லை. என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் தெரிவித்துள்ள பட்டய கணக்கர் பெயர் என்னவென்று என்னுடைய பிரமாண பத்திரிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். வங்கி மேலாளர் என்னை கட்டாயப்படுத்தி கடன் கொடுத்தார் என்றால் சரியல்ல. கடன் வாங்கும் போது படித்துப்பார்க்காமல் கையெழுத்துப் போட்டேன் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. வங்கிக்கு கடைசியாக எப்போது தவணை செலுத்தினேன் என்றால் அது ஞாபகம் இல்லை. ஜனவரி மாதம் 2019 உடன் நான் தவணை செலுத்துவதை நிறுத்திவிட்டேன் என்றால் சரிதான். அதனால் தான் 30 நாட்கள் என்னுடைய கணக்கை NPA செய்துவிட்டார்கள் என்றால் அதுகுறித்து எனக்கு அறிவிப்பு எதுவும் வரவில்லை. வழக்கறிஞர் அறிவிப்பு எனக்கு சார்வாகவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய வீட்டு முகவரி என்னவென்றால் No.3 நடேசன் நகர், சுண்டக்காமுத்தூர் மெயின் ரோடு, கோவைப்புதூர், கோயமுத்தூர் ஆகும். என்னுடைய அலுவலக முகவரி என்னவென்றால் No.1 நடேசன் நகர், சுண்டக்காமுத்தூர் மெயின் ரோடு, கோவைப்புதூர், கோயமுத்தூர் ஆகும். இரண்டும் அருகருகே உள்ளது. என்னுடைய பிரமாணப்பத்திரிக்கையில் 2019 இறுதி வரை தவணை செலுத்தியதாக சொல்லியுள்ளது தவறு என்றால் சரிதான், அது ஞாபக மறதியாக சொல்லிவிட்டேன். என் பிரமாணப்பத்திரிக்கையில் வங்கியில் அபரிமிதமாக வட்டி வசூல் செய்துள்ளதாக தவறாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பிரமாணப்பத்திரிக்கையில் பத்தி 14 ல் 2019 ல் கோவிட் தொற்று காரணமாக தொகை செலுத்த முடியவில்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. OTS சம்பந்தமாக வங்கி மேலாளரை 2022 ல் சந்தித்தேன். 2023 ல் கடிதம் கொடுத்தேன். அந்த கடிதத்தின் நகலை நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ளேன். ரூ.50,000/- கடனை உயிர்ப்பிப்பதற்காக தான் கட்டினேன் என்றாலும் OTS க்காக கட்டவில்லை என்றால் சரியல்ல, வங்கி மேலாளர் கட்ட சொன்னதால் கட்டினேன். அது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரமாணப்பத்திரிக்கையில்

பத்தி 16 ல் சொல்லியுள்ள விவரங்கள் சரிதான். வங்கிக்கு செலுத்த வேண்டிய கடனை நான் திரும்ப செலுத்த கடமைப்பட்டவர் என்றால் வட்டியை தள்ளுபடி செய்தால் நான் பணம் செலுத்த தயாராக இருக்கிறேன். பிரதிவாதி தரப்பு சான்று ஆவணம் 1 மற்றும் 2 இந்த வழக்கிற்கு எந்த வகையிலும் சம்பந்தப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. 2023 மற்றும் 2024 ம் ஆண்டில் மருத்துவ சிகிச்சை எடுத்ததற்கான ஆவணம் தான் நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனவே இந்த ஆவணங்கள் நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ள தக்கது என்றால் சரியல்ல.

B THANGAMANIGANESH

Digitally signed by B THANGAMANIGANESH
Location: -
Date: 2026.06.23 17:59:27 +0530

Judge,
Commercial Court,
(Senior Civil Judge Cadre),
Coimbatore.